

சிவகங்கை மாவட்ட கலைஞர் தொலைக்காட்சி செய்தியாளர் ஆர்.ஜகன்நாத், ஆர்.ராம்நாத் ஆகியோரின் தந்தை ராஜாராம் மறைவு அறிந்து அவரது இல்லத்திற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் நேரில் சென்று திருமதி கமலாராஜாராமிடம் ஆறுதல் கூறினார். உடன் ஆர்.ஜெகன்நாத், ஆர்.ராம்நாத் ஆகியோர் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாமன்னர் திருமலை நாயக்கர் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆரப்பாளையம் கிராஸ் ரோடு பகுதியில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின் படி மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி, பெ. குழந்தைவேலு ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், மூவேந்திரன், பி.டி.மணிமாறன், வைகை பரமன், முத்து கணேஷ், பாண்டி செல்வி, பகுதி செயலாளர் எஸ்.எஸ்.மாறன், ஆட்டோ சுரேஷ் சீனி ரமேஷ் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து செல்லூர் 60 அடி ரோட்டில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்– மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் ரவீந்திரன், பொன்சேதுராமலிங்கம், ராதாகிருஷ்ணன், குரும்பன், அறிவு நிதி, ஆபித், மணிகண்டன், முத்துமோகன், சுரேஷ், பவுன்ராஜ், நல்ல காமன், மாயம்பெருமாள், ஜெயராஜ், முரளி கணேஷ், உமா ரவி ஆகியோர் முன்னிலையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவை துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், கழக கொள்கை பரப்புச் செயலாளர் – தமிழக பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ லியோனி ஆகியோர் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் வ. வேலுசாமி, பெ. குழந்தைவேலு, மா. ஜெயராம், தனச்செல்வம், மேயர் இந்திராணி, பொன் வசந்த், மா. ஒச்சு பாலு, மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல் அக்ரி கணேசன், ஆர்.கணேசன், பாக்கியநாதன், வீர கணேசன், இளைஞரணி சௌந்தர்ராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இராமேஸ்வரம் நகர், 10.2.2025 ந்தேதியன்று, நகர் கழக பூத் பாகமுகவர்கள், கூட்டம், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான, காதர்பாட்சா முத்துராமலிங்கம் வழிகாட்டுதலின்படி, இராமநாதபுரம் தொகுதி பொறுப்பாளர், மருத்துவ அணி செயலாளர், சுதர்சனம், தலைமையில் நடைபெற்றது. திரளாக கழக தோழர்கள், நகர் கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை இராமேஸ்வரம் நகரக் கழகச் செயலாளர் நகர் மன்ற தலைவர் நாசர் கான் ஏற்பாடு செய்திருந்தார்.



விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 6வது நிதிக் குழு மானியம்,பள்ளி மேம்பாட்டு மானியம் திட்டத்தின் கீழ் ரூ.48லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்டிடம்,இருசக்கர வாகனம் நிறுத்துமிடம்,சுகாதார வளாக கட்டிடம் கட்டுவதற்கு மற்றும் பள்ளி கட்டிடம் பராமரிப்பதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் தபசுமுத்து, விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில் குமார், விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மும்மூர்த்தி, விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஸ்ரீதர் உட்பட ஆசிரியைகள் ஆசிரியர்கள், மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

